# கரைச்சி பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 03 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கரைச்சி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரைச்சி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துகள், செலவினம் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதி என்பவற்றின் கீழ் காணப்படுகின்றன.

| | சொத்துக்கள் | | செலவினம் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| குறைத்துக் கூறல் | 01 | 3,532,315 | - | - |
| அதிகரித்துக் கூறல் | 01 | 13,050 | 01 | 172,367 |

### 1.3.2 பெறுமதி மதிப்பிடப்படாத வாகனங்கள்

கிளிநொச்சி மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மீளாய்வாண்டில் 18 வாகனங்களை நன்கொடையாக வழங்கியிருந்தார். இவை பெறுமதியிடப்பட்டு நிதிசார் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிசார் விளைவுகள் மீண்டுவருஞ் செலவிலும் கூடிய வருவாய் மிகையாக ரூபா 11,081,595 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீண்டுவருஞ் செலவிலும் கூடிய வருவாய் மிகையாக ரூபா 40,403,697 விளைந்திருந்தது.

### 2.2 வரவு, செலவுத் திட்டக்கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமான, செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியதன் காரணமாக வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாகவுள்ள வருவாய்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாகவுள்ள வருவாய் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 10 | - | - |
| (ii) | குத்தகை வாடகை | 22,843 | 18,745 | 508 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,805 | 2,941 | - |
| (iv) | வேறு வருவாய் | 52,421 | 40,250 | 7,983 |

### 2.3.2 வாடகை நிலுவை

மீளாய்வாண்டில் ரூபா 507,638 சந்தைக் குத்தகை வாடகையாக அறவீடு செய்யப்படாதிருந்தது. இதனை அறவிடுவதற்கு சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்

மீளாய்வு ஆண்டின் பொருட்டு நீதிமன்றங்களிலிருந்து பெற வேண்டிய தண்டப்பணம் ஆகிய ரூபா 4,814,733 அறவிடப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைக் கட்டணம்

(அ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணப் பட்டியல் பதிவாளர் நாயகத்திடமிருந்து கோரப்படவில்லை.

(ஆ) 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணமாகிய ரூபா 3,532,315 அறவிடப்படுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | தொகை |
|---|---|
| | ரூபா |
| 2010 | 1,059,550 |
| 2011 | 2,472,765 |
| | **3,532,315** |

## 2.4 இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | 1989 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி, நிர்வாக) ஒழுங்கு விதி | |
| | அத்தியாயம் III<br>பிரிவு 76 | ரூபா 60,833 வாடகைக் கொடுப்பனவு தாமதங்கள் பற்றி அரசிறை எழுதுநர் செயலாளருக்கு அல்லது தலைவருக்குத் தெரிவிக்கவில்லை. |
| | பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றத் தண்டப் பண மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2011.09.09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1722/27 உப பிரிவு 11 | சபையினது பாவனையிலுள்ள வாகனங்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (iii) | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை - 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்கம் | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை |
| (iv) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டி -2006 பிரிவு 2.14.1 | ரூபா 100,000 பெறுமதிக்கு மேல் பொருட்கள் அல்லது சேவைகள் மேற்கொள்ளப்படுகையில் 05 கூறுவிலைகளுக்குக் குறையாமல் பெறப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டபோதும், சபையினால் ரூபா 270,000 பெறுமதிக்கு |

தளபாடம் கொள்வனவு செய்யப்படுகையில் இந் நடைமுறை பின்பற்றப்படவில்லை.

**2.5 அறவிடப்படாத வருவாய்**

**2.5.1 தொலைத் தொடர்புக் கோபுரத்துக்கான கட்டணம்**

2009.04.17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்த மானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்ட 07 தொலைத் தொடர்புக் கோபுரங்களுக்கான கட்டணங்கள் அறவீடு செய்யப்படவில்லை.

**2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்**

**2.6.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 250,000 பெறுமதியான ஜெயந்தி நகர் இறைச்சிக் கடை குத்தகைக்கு வழங்கப்படாமையால் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் பாவனைக்கென சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் (Save the Children Fund) நன்கொடையாக வழங்கப்பட்ட 02 சூரிய மின் கலங்கள் 03 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**2.7 பெறப்பட வேண்டிய கணக்குகள்**

அரசிறைக் கடனாளிகள் கணக்கில் ரூபா 25,433 அறவிடப்படாது தொடர்ந்து இந்த அறிக்கைத் திகதிவரை மீதியாகக் காணப்பட்டது.

**2.8 ஒப்பந்த நிர்வாகம்**

**2.8.1 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்**

சபையினால் மீளாய்வாண்டில் செயற்படுத்தவென திட்டமிடப்பட்ட ரூபா 8,535,681 பெறுமதியான 03 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மட்டும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருவாய்ச் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) ஆளணி

(உ) நன்கொடை

(ஊ) நானாவித வைப்புகள்

(எ) வரவு செலவுத் திட்டம்

(ஏ) களஞ்சியப் பொருட்கள்